**உள்ளக அலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

**தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின்**

**பொலன்நறுவை தொழிநுட்ப மரபுரிமை நூதனசாலையில்**

**ஆரம்ப (தொழிநுட்பம் சாராத) சேவையின் வெற்றிடங்களக்காக விண்ணப்பப் படிவங்கள் கோரல்**

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் பொலன்நறுவை தொழிநுட்ப மரபுரிமை நூதனசாலையில் ஆரம்ப (தொழில்நுட்பம் சாராத) தொகுதியில் நூதனசாலை உதவியாளர் மற்றும் நூதனசாலை காவளாளி பதவிகளில் ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் இலங்கையர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

**01. ஆரம்ப (தொழிநுட்ப சாராத) சேவை தொகுதி (PL-1-2016)**

- நூதனநாலை காவளாளி (IIIம் வகுப்பு) - வெற்றிடங்கள் 08
- நூதனசாலை உதவியாளர் (IIIம் வகுப்பு) - வெற்றிடங்கள் 14

02.

**2.1 கல்வித் தகைமைகள்**

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாதவாறு இரண்டு திறமை சித்திகளுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தியெய்து இருத்தல் வேண்டும்.

**2.2 உடற்தகைமை**

விண்ணப்பதாரிகள் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கூடியவராகவும், கடமையாற்றுவதற்கான சிறந்த தேகாரோக்கியமும், சிறந்த மன உறுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**2.3 சம்பள அளவுத் திட்டம் - PL 1 – 2016**

**நூதனசாலை காவளாளி**

24250 ரூபா – 10 x 250 – 10 x 270 – 10 x 300 – 12 x 330 – 36410 ரூபா என்ற சம்பள அளவு திட்டத்தில் ஆரம்ப படிமுறையின் கீழ் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள்

**நூதனசாலை உதவியாளர்**

24250 ரூபா – 10 x 250 – 10 x 270 – 10 x 300 – 12 x 330 – 36410 ரூபா சம்பள அளவு திட்டத்தில் ஆரம்ப படிமுறையின் கீழ் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள்

**குறிப்பு** – மேற்குரிய சம்பள அளவு திட்டத்தில் மற்றும் அவ் அவ் வகுப்புக்குறிய உரிய ஆரம்ப சம்பள படிமுறைகள் 03/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றுநிரூபத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படும்

## 2.4 சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்

இப்பதவி நிரந்தரமானது. மூன்று வருடகால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கைத் திட்டங்களுக்கமைய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து தாங்கள் அதற்குக் கட்டுப்பட்டவர்களாவீர்கள். விண்ணப்பதாரிகள் இப்பதவியில் சேர்த்துக் கொள்ளப்படுமிடத்து கட்டாயமாக விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்

## 2.5 ஆட்சேர்ப்புமுறை

தேசிய நூதனசாலை பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முக தேர்வுக் குழு மூலம் திறன் மதிப்பீடு செய்யப்பட்டு அதிக பெறுபேறுகள் பெறும் விண்ணப்பதாரர்கள் நேர்முக குழுவின் தீர்மானத்தின்படி பதவியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

| தகுதிகாண் சோதனையில் புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | அதிகப்பட்ச புள்ளிகள் |
|---|---|
| 1. ஆகக்கூடிய கல்வித்தமை | 20 |
| 2. முன்னனுபவம் | 40 |
| 3. துறைக்கு ஏற்ப அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் பாடநெறி மற்றும் பயிற்சி | 20 |
| 4. விளையாட்டு மற்றும் வெளிவாரி தகைமைகள் | 15 |
| 5. நேர்முக தேர்வின் போது வெளிப்படுத்தப்படும் மனோதிடம் மற்றும் ஆளுமை | 05 |

## 2.6 வேறு தகைமைகள்

(அ) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(இ) 2018.03.05 ஆந் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று சகல தகைமைகளையும் பூர்த்திச் செய்திருத்தல் வேண்டும்.

# 3 விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும் முறை

- விண்ணப்பங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் A4 அளவிலான கடதாசியில் இருபக்கத்தையும் உபயோகித்து தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரியின் கையெழுத்தில் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.

- இலக்கம் 01 தொடக்கம் 08 வரையான விடயங்களை முதலாம் பக்கத்திலும், இலக்கம் 09 தொடக்கம் 12 வரையான விடயங்களை இரண்டாம் பக்கத்திலும், இலக்கம் 13

தொடக்கம் 15 வரையான விடயங்களை மூன்றாம் பக்கத்திலும் அமையும் வகையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

- குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2018.03.05 ஆந் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ **பணிப்பாளர நாயகம், தேசிய நூதனசாலைகள் திணைக்களம், த.பெ. இல. 854, ஸ்ரீமத் மாக்கஸ் பெர்னாந்து மாவத்தை, கொழும்பு 07** எனும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

- ஒழுங்குமுறைப்படி தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் முன்னறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதென அறிவிக்கப்படவும் மாட்டாது.

- விண்ணப்பப் படிவங்களை உறையிலிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடல் வேண்டும்.

- இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பிக்குமிடத்து, விண்ணப்பபடிவங்கள் வெவ்வேறாக நிரப்பி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**4 கையொப்பத்தை உறுதிசெய்தல்**

வணக்கத்திற்குரிய மதத் தலைவர் அல்லது சமாதான நீதவான் அல்லது அரச பாடசாலை அதிபர் அல்லது வருடத்திற்கு 240,360 ரூபா சம்பளம் பெறும் அரச பதவிநிலை உத்தியோகத்தர் எவரேனும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். ஏற்கெனவே அரச சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**5 வேறு**

I. விண்ணப்பங்களை அனுப்பி வைக்கப்படும் போது கல்விப்பொது தராதார பத்திர (சாதாரண தர) பரீட்சை பெறுபேற்று பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அனுப்பி வைத்தல் வேண்டும். **பெறுபேற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பத்திர பிரதிகள் இணைத்து அனுப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.**

II. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும், ஆட்சேர்ப்புபற்றிய விடயங்கள் தொடர்பாகவும் தேசிய நூதனசாலைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

பணிப்பாளர் நாயகம் (பதிற் கடமை),

தேசிய நூதனசாலைகள் திணைக்களம் ,

இல. 854, ஸ்ரீமத் மாக்கஸ் பெர்னாந்து மாவத்தை,

கொழும்பு 07.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் ……………………………………. பதவிக்கான விண்ணப்பப் படிவம்**

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

| |
|---|
| |

**01. விண்ணப்பதாரியின் பெயர்**

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர்

I) சிங்களத்தில்/ தமிழில் …………..…………..……………………………...

……………………………………………………………………………

II) ஆங்கிலத்தில் (IN BLOCK LETTERS) …...……………………………

……………………………………………………………………………

1.2 முதலெழுத்துக்களுக்குரிய பெயர்கள்

I) சிங்களத்தில்/ தமிழில் ……………………...……………………………

……………………………………………………………………………

II) ஆங்கிலத்தில் (IN BLOCK LETTERS) …….………………...…………

……………………………………………………………………………

**02. முகவரி**

I) சொந்த முகவரி ……………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

II) மாவட்டம் ……………………………………………………………...

III) அலுவலக முகவரி (தொழில் செய்வதாயின்) ……………………………...

……………………………………………………………………………

**03. தேசிய அடையாள அட்டை இலக்கம்** -

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |

**04. ஆண் /பெண்** ஆண் - 0 **(உரிய இலக்கத்தை மேலுள்ள கூட்டில் இடவும்)**
பெண் - 1

| |
|---|
| |

**05. தொலைபேசி இலக்கம் சொந்த** …………………………… அலுவலக ……………………...

**06. விவாகமானவரா/விவாகமாகாதவரா-** ……………………………………………

**07. இனவர்க்கம்** - ………………………

**08. பிரஜாவுரிமை** - வம்சாவழியாக/ பதிவு மூலம்

**09. பிறந்த திகதி** வருடம் | | | | | மாதம் | | | திகதி | | |

2018.03.05 திகதிக்கு வயது:- வருடம் | | | மாதம் | | | திகதி | | |

**10. கல்வித் தகைமைகள்**

**I) க.பொ.த. (சா.த.) முதலாம் தடைவ/ இரண்டாம் தடவை**

பரீட்சைச் சுட்டிலக்கம்.............. வருடம் .............. மொழி மூலம் ..............

**சித்தி பெற்ற பாடங்கள் தரம்**

1. ........................ ............
2. ........................ ............
3. ........................ ............
4. ........................ ............
5. ........................ ............
6. ........................ ............
7. ........................ ............
8. ........................ ............

குறிப்பு– சகல சான்றிதழ்களினதும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.

**11. தொழிற்தகைமைகளும், விசேட திறமைகளும்**

| பாடநெறி | நிறுவனம் | விடயங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |

குறிப்பு– சகல பாடநெறிகளுக்கான சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்படல் வேண்டும்.

**12. அநுபவங்கள் பற்றிய விபரம்**

| அனுபவம் | நிறுவனம் | சேவையாற்றிய காலப்பகுதி |
|---|---|---|
| | | |

குறிப்பு– சகல பாடநெறிகளுக்கான சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்படல் வேண்டும்.

**13. தற்போது சேவையிலிருப்பதாயின் அது பற்றிய விபரங்கள்**

1. பதவியும், தரமும் ..........................................................................
2. நியமனத் திகதி ..........................................................................
3. நிறுவனம் ..........................................................................
4. ஓய்வூதியத்துடனான பதவியா இல்லையா என்பது............................................

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்குத் தெரிந்த வரையில் உண்மையானவையும். சரியானவையும் என உறுதிப்படுத்திக் கூறுகின்றேன். இத் தகவல்கள் பிழையானவை அல்லது பொய்யானவை என பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து நான் தகுதியற்றவர் எனவும், பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து பதவி ரத்துச் செய்யப்படும் எனவும் நான் நன்கறிவேன்.

................................ ......................................

திகதி. விண்ணப்பதாரியின் கையொப்பம்

**14. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ....................................................... என்பவரை நான் ஏற்கெனவே நன்கறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் கையொப்பமிட்டுள்ளார் எனவும் உறுதிமொழிகின்றேன்.

......................................... .........................................

திகதி உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் பெயர் ...........................................................
பதவி ...........................................................
முகவரி ...........................................................
உத்தியோகபூர்வ முத்திரை ..........................................................

**15. அரசசேவை அல்லது மாகாணசேவையில் தற்போது சேவையிலிருக்கும் விண்ணப்பதாரியாயின் திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

............................................................ திரு/திருமதி/செல்வி என்பவர் அமைச்சில்/ திணைக்களத்தில் நிரந்தர பதவி வகிப்பவர் எனவும், அவர் குறித்த நியமனத்திற்கு தெரிவு செய்யப்படுவாராயின் தற்போதைய சேவையிலிருந்து அவருக்கு விடுவிப்பு வழங்கமுடியுமெனவும்/ முடியாதெனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

.............................. .............................................

திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பம்

உத்தியோக பூர்வ முத்திரை